## டிசம்பர் – 04 – திங்கள்

### புனித தமாஸ்குஸ் யோவான்

**"நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லும்" (மத் 8:8)**

**முதல் வாசகம் : ஏசாயா 2 : 1 - 5**

யூதாவையும் எருசலேமையும் குறித்து ஆமோட்சியின் மகன் எசாயா கண்ட காட்சி. இறுதி நாள்களில் ஆண்டவரின் கோவில் அமைந்துள்ள மலை எல்லா மலைகளுக்குள்ளும் உயர்ந்ததாய் நிலைநிறுத்தப்படும். எல்லாக் குன்றுகளுக்குள்ளும் மேலாய் உயர்த்தப்படும். மக்களினங்கள் அதைநோக்கிச் சாரை சாரையாய் வருவார்கள். வேற்றினத்தார் பலர் அங்கு வந்து சேர்ந்து "புறப்படுங்கள் ஆண்டவரின் மலைக்குச் செல்வோம் யாக்கோபின் கடவுளின் கோவிலுக்குப் போவோம். அவர் தம் வழிகளை நமக்குக் கற்பிப்பார் நாமும் அவர் நெறிகளில் நடப்போம்" என்பார்கள். ஏனெனில், சீயோனி லிருந்தே திருச்சட்டம் வெளிவரும் எருசலேமிலிருந்தே ஆண்டவரின் திருவாக்கு புறப்படும். அவர் வேற்றினத்தாரிடையே உள்ள வழக்குகளைத் தீர்த்து வைப்பார். பல இன மக்களுக்கும் தீர்ப்பளிப்பார். அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள், ஓர் இனத்திற்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது. அவர்கள் இனி ஒருபோதும் போர்ப்பயிற்சி பெறமாட்டார்கள். யாக்கோபின் குடும்பத்தாரே, வாருங்கள் நாம் ஆண்டவரின் ஒளியில் நடப்போம்.

**பதில்பாடல் :** அகமகிழ்வோடு ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம்

**நற்செய்தி : மத்தேயு 8 : 5 - 11**

அக்காலத்தில் இயேசு கப்பர்நாகுமுக்குச் சென்றபோது நூற்றுவர் தலைவர் ஒருவர் அவரிடம் உதவி வேண்டி வந்தார். "ஐயா, என் பையன் முடக்குவாதத்தால் மிகுந்த வேதனையுடன் படுத்துக் கிடக்கிறான்" என்றார். இயேசு அவரிடம், "நான் வந்து அவனைக் குணமாக்குவேன்" என்றார். நூற்றுவர் தலைவர் மறுமொழியாக, "ஐயா, நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் என் பையன் நலமடைவான். நான் அதிகாரத்துக்கு உட்பட்டவன். என் அதிகாரத்துக்கு உட்பட்ட படைவீரரும் உள்ளனர். நான் அவர்களுள் ஒருவரிடம் "செல்க" என்றால் அவர் செல்கிறார். வேறு ஒருவரிடம்" வருக" என்றால் அவர் வருகிறார். என் பணியாளரைப் பார்த்து" இதைச் செய்க" என்றால் அவர் செய்கிறார்" என்றார். இதைக் கேட்டு இயேசு வியந்து, தம்மைப் பின்தொடர்ந்து வந்தவர்களை நோக்கி, "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் இஸ்ரயேலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை. கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோப்பு ஆகியோருடன் விண்ணரசின் பந்தியில் அமர்வர்" என்றார்.

**தியானம்:** நாம் யாரும் கடவுளைக் கண்டதில்லை. நான் கடவுளைக் கண்டேன் என் குழந்தை வடிவிலே என்பது ஒரு கவிஞனின் அற்புதமான வரிகள். கடவுள் மனித வடிவிலே நம் மத்தியில் உலா வருகிறார். நம்மால் அதனை பல நேரங்களில் புரிந்து கொள்ள முடிவதில்லை. குடும்ப உறவினர் வடிவில், நண்பர் வடிவில், அயலவர் வடிவில் அவர் நம்மோடு பேசுகிறார். அவை கடவுளின் குரல் என்பதனை நாம் புரிந்து கொள்வது கடினமே. முன் நாட்களில் தீர்க்க தரிசிகள் வடிவில் பேசிய இறைவன் மனித உருவில் தம் மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவரின் வரவை ஆயத்தம் செய்யும் காலமாக திருச்சபை நமக்கு திருவருகைக் காலத்தை தந்துள்ளது. ஆனால் நாம் புற ஆயத்தங்களில் செலவிடுவதனையே அதிகம் விரும்புகிறோம். இன்றைய நற்செய்தியில் காணும் நூற்றுவத்தலைவன் தனது தகுதியற்ற நிலையை ஒப்புக் கொண்டு யேசுவிடம் வருகிறான், அவனிடம் எல்லாம் இருந்தது, ஆனால் மன நிம்மதி இல்லை. நமது குடும்பங்களில் யாராவது நோயுற்றிருந்தால் நம்மால் நிம்மதியாக வாழ முடியுமா? அதுபோலவே அவனும் இருந்தான். ஆனால் யேசுவைப் பற்றி அறிந்து அவரைத் தேடி வருகிறான். அவனது நம்பிக்கையைப் பார்த்து யேசு ஆச்சரியப் படுகிறார். இன்று நமது நம்பிக்கை எந்த அளவில் உள்ளது? துன்பத்தைக் கண்டு துவண்டு விடுவதுதானே நமது இயல்பு. அதனை மீறி வெற்றி கொள்ள நமது நம்பிக்கை நமக்கு ஒரு ஆயுதம் ஆகும். முதல் வாசகத்தில் கூறப்பட்டதுபோல், போர் பயிற்சியும் யுத்தமும் இல்லாத நாடுகள் இன்று எங்கு உண்டு. எல்லா இடமும் ரத்த ஆறு ஓடுகிறது. மனித உயிர் மதிப்பற்றுக் கிடக்கிறது. பாலக யேசுவின் பிறப்பில் எல்லோரின் மனங்களும் மாறி நம்பிக்கை ஒளி பிறக்க வேண்டுவோம். மண்ணுக்கும் விண்ணுக்கும் பாலமாக வந்த பாலகன் நமது விசுவாச வாழ்விற்கும், ஒரு பாலமாக, பாதையாக மாறுவாரா!